"காலத்தின் போக்கை உணருங்கள்" Regd. No. M 6207

# கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - ஜூன் 15 * 1954 * விலை 1 அணா இதழ் 16

CONNEMARA PUBLIC LIBRARY 3 - JAN 1956 MADRAS

825

## நாட்டுச் செக்கு பிழைக்குமா?

**[ஸ்ரீ சேதிலால் குப்தா என்பவர் சென்ற 30 வருட காலமாக நிர்மாணத் துறையில் வேலை செய்து வருபவர். அவர் தன்னுடைய கிராமத்தின் நிலைமையைப் பற்றி திட்டக் கமிஷன் காரியதரிசி ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அக்கடிதத்தில் இருந்து நவீன யந்திர மோகத்தினால் கிராமக் கைத்தொழில்கள் எவ்விதம் நசுக்கப்படுகின்றன என்பதை வாசகர்களுக்கு நன்றாக விளக்குகிறார்.]**

**ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா,**

திட்டக் கமிஷன்காரியதரிசி,
புது டில்லி.

அச்நேரா - ஆக்ரா
31—5—'54.

ஆக்ராவுக்கு 16 மைலில் உள்ள அச்நேரா என்ற கிராமத்தில் சென்ற 30 ஆண்டுகளாக நிர்மாணத் திட்டத்தை "சத்தியாஸ்ரமம்" என்ற ஸ்தாபனம் நிறைவேற்றி வருகிறது. இந்த ஆசிரமத்திற்கு காந்தியடிகள், சர்தார் படேல், ஸ்ரீ சங்கரராவ் தேவ் ஆகிய தலைவர்கள் விஜயம் செய்து ஆசீர்வதித்திருக்கிறார்கள். இந்த கிராமத்தின் ஜனத்தொகை 8,800. ஏனைய கிராமங்களைப் போலவே இங்கும் தரித்திரம், வேலையின்மை, நோய்நொடிகள் முதலியன தாண்டவமாடுகின்றன.

தங்களுக்கு கடிதம் எழுதுவதற்கான முக்கிய காரணங்கள் பின் வருமாறு:—

1. 1951-ம் வருடம் வரையில் இந்த ஊரில் 10 செக்குகள் ஓடிக்கொண்டிருந்தன. பல இன்னல்களிடையே ஏதோ ஒரு மாதிரியாக எண்ணை விற்பனையாகி வந்தது.

2. இப்பகுதிகளில் செக்கு நடத்துகிறவர்கள் முஸ்லீம்கள். 10 வாணியர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் எண் 80 ஆகும்.

3. 1953-ம் வருடத்தில் இரண்டு செக்குகள் நின்று விட்டன. அருகாமையில் உள்ள ஆக்ரா, பரத்பூர் முதலிய நகரங்களில் உள்ள எண்ணை ஆலைகளுடன் இவைகள் போட்டியிட முடியவில்லை.

4. இப்பொழுது நடைபெற்றுவரும் 8 செக்குகளும் இரண்டொரு மாதங்களில் நின்றுவிடப் போகின்றன. இதன் காரணமாக 65 புதிய நபர்கள் வேலையின்மை, பசிப்பிணி இவைகளுக்கு பலியாகிவிடுவார்கள்.

5. இந்த ஊரில் 6 மாவு அரைக்கும் மில்கள் இருக்கின்றன. அவைகளில் இரண்டில் 3 எண்ணை பிழியும் எக்ஸ்பெல்லர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இரண்டு ரூபாய் கூலிக்கு அவைகள் ஒரு மணு எண்ணை வித்தை ஆட்டுகின்றன. இதன் காரணமாக நாட்டுச் செக்குகள் அறவே நின்று போகின்றன.

இத்துடனல்லாமல் மாவு மில்காரர்கள் மாவு அரைப்பதுடன், பஞ்சு உடைத்தல், சுண்ணாம்பு அரைத்தல் ஆகியவைகளுக்கான யந்திரங்களையும் பொருத்திவிடுகிறார்கள். எனவே இந்தத் தொழில் செய்து பிழைத்தவர்களும் இப்பொழுது வேலையை இழந்து விடுகிறார்கள்.

ஏற்கனவேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறமிருக்க, மேலே கூறியுள்ளபடி புதிதாக அவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதுடன், வேலையிழந்தவர்களுக்கு என்ன செய்யலாம் என்பதற்கு தங்களின் மேலான யோசனைகளையும் வேண்டுகிறேன்.

அக்கம் பக்கத்தில் உள்ள கிராமங்களிலும் ஏறக்குறைய இதே நிலைமைதான் இருந்து வருகிறது. மாவுமில்களுடன் கூட இதர யந்திரங்களையும் பொருத்தி வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கப்பட்டு வருகிறது. காந்தீய நிர்மாணத்திட்டத்திலும், வழிகளிலும் நன்றாக அனுபவம் வாய்ந்த தங்களிடமே, நாங்கள் எங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்ளுகிறோம்.

தங்கள்,

**சேதிலால் குப்தா,**

சத்யாச்சிரமக் காரியதரிசி.

## கதர்க் கலைக் கண்காட்சி

**ஊதியூர்**

இக்கண்காட்சி ஊதியூரில் 3–6–'54 உ நடைபெற்ற தாராபுரம் தாலூகா 6-வது அரசியல் மகாநாட்டில் நடைபெற்றது. இதில் அம்பர் ராட்டையின் ஆராய்ச்சி இலாகாவினரும், நைனுக் கவுண்டன்வலசு பரிசிரமாலய மாணவ மாணவிகளும், காசிலிங்கம்பாளையம், குமாரக் கவுண்டன் வலசு பரிசிரமாலய மாணவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

முதலில் அம்பர் ராட்டைக்குரிய பஞ்சுடைக்கும் கருவி, பட்டை தயாரிக்கும் கருவி, அம்பர் ராட்டைமுதலியன வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் பஞ்சுடைத்தல், பட்டை தயாரித்தல், நூல் நூற்றல் ஆகிய வேலை தொடர்ந்து நடைபெற்றது. அதையடுத்து மூங்கில் ராட்டை செய்தல், கதிர் தயாரித்தல், நரம்பு செய்தல், பருத்தி அரைத்தல், மத்திய வில்லில் பஞ்சுடைத்தல், தக்ளியில் நூற்றல், மூங்கில்ராட்டையில் ஓரிழை நூற்றல், மூங்கில் ராட்டையில் ஈரிழைஸ்டாண்டின் மூலம் நூற்றல், மூங்கில் ஈரிழை ராட்டையில் நூற்றல், நூற்ற நூலை கதிரிலிருந்தே பாவு ஓடுதல், சிட்டத்தை கறந்து பாவு ஓடுதல், பிணைத்தல், நெசவு செய்தல் நாடாவில் நூற்ற நூல் கண்டை அப்படியே வைத்து நெய்தல் ஆகிய வேலைகள் வரிசைக்கிரமமாக நடைபெற்றன. இவ்வித நெசவு செய்வதில் ஒரு விசேஷ முறை கையாளப்பட்டு நெசவு நடைபெற்றது. சாதாரணமாக நூற்ற நூலை சிட்டம் போட்டு, பின்னர் அதைக் கறந்து, தார் சுற்றித் தான் நெசவு செய்கிறார்கள். ஆனால் இம் முறை

(தொடர்ச்சி 72-ம் பக்கம் பார்க்க)

3-JAN 1956



# கிராமோதயம்

ஜூன் 15 1954

## காலத்தின் போக்கை உணருங்கள்

எந்த நல்ல காரியமும் கடுமையான தவம் உழைப்பு, முயற்சிகளுக்குப் பிறகுதான் கைகூடுகிறது. அதே மாதிரிதான் பூமிதான இயக்கமும் கடுமையான சோதனைகளுக்குப் பிறகு கடவுளின் அருளால் பலனளிக்கத் தொடங்கி இருக்கிறது. கிராமங்களிலெல்லாம் இதன் பிரசாரம் ஏற்பட்டது. ஐந்து லட்சம் கிராமங்கள் கொண்ட நமது தேசத்தில் ஐம்பதாயிரம் கிராமங்களுக்காவது நமது ஊழியர்கள் சென்றிருக்கக்கூடும். இவைகளில் இருந்து 32 லட்சம் ஏக்கரா பூமி தானம் கிடைத்திருக்கிறது.

பூமிதான இயக்கத்தின் தத்துவத்தை அறிந்தவர்கள் நிறையக் கொடுத்திருக்கிறார்கள். ஏழைகள் இதை தங்களுடைய இயக்கமாகக் கருதியபடியால் தங்களிடம் உள்ள சொற்ப நிலத்தில் இருந்தும் மழைத் துளிகள் போல தானம் வழங்கி இருக்கிறார்கள். பணக்காரர்கள் இந்த விஷயத்தை மெதுவாக உணர்ந்து வருகிறார்கள். அவர்களிடம் அதிகமான சொத்து இருப்பதால் பற்றுதலும் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் விஷயத்தை உணர்ந்த உடன் அவர்கள் அள்ளிக் கொடுக்கிறார்கள். இங்கு நிறைய பூமி தானம் கிடைத்தாலும், பெரிய நிலச்சுவான்தாரர்களால் அவைகள் கிடைக்கவில்லை. அவர்கள் மிகசொற்பமாகக் கொடுத்ததால் நமது ஊழியர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கோவில், மடம், ஆசிரமம் ஆகியவைகளுக்காக எவ்வளவு குறைவாகக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளலாம். அந்த நியதி பூமிதானத்திற்குப் பொருந்தாது. நாம் தேசம் முழுவதிலுமுள்ள ஏழைகளுக்காக, உரிமையுடன் ஆறில் ஒரு பங்கு தானம் வேண்டுகிறோம். தானம் வழங்கியவர்கள் தனக்கும், தேசத்திற்கும் நன்மை செய்தவர்கள் ஆகிறார்கள். அதிக நிலமிருந்தால்தான் அதிக விளைச்சல் என்பதில்லை. குறைந்த அளவு நிலத்திலும் அதிகமான விளைச்சலை எதிர்பார்க்கலாம். இம்மாதிரியான அனுபவம் பீஹார், ஹைதராபாத், உத்திரப் பிரதேசம், மத்திய மாகாணம் ஆகிய இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. எனவே பெரிய நிலச்சுவான்தார்கள் தங்களிடம் உள்ளதில் ஆறில் ஒரு பங்கை தருவதால் ஒன்றும் குறைந்துவிட மாட்டார்கள். அவர்களுக்கு நன்மையே ஏற்படும்.

### வகுப்பு வேற்றுமை, மனவேற்றுமை-நமது அபாயங்கள்

பூமிதான இயக்கம் நிலமும், சம்பத்தியும் கேட்பதற்காக அல்ல. இதன் மூலம் சமூகத்தில் உள்ள வகுப்பு, மன வேற்றுமைகளை அகற்றி புதிய ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்துவதுதான். இன்றைய நிலைமை ஒருவர் பேச்சை மற்றொருவர் கேட்காமலும், தன் சுயநலத்திற்காக சேர்ப்பதுமாகத்தான் இருக்கிறது. ஒவ்வொருவரும் தன்னிடம் அதிகமாக வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் சமூகத்தின் சேவைக்காக அர்ப்பணம் செய்தால்தான் சமூகம் முன்னேற்றம் அடையும், பெண்கள் தங்க வெள்ளி நகைகள் அணிகிறார்கள், தங்கமாக இருந்தாலும் இவைகள் விலங்கு போலாகும். அதனால் பெண்கள் வெளியே போகப் பயப்படுகிறார்கள். இந்த சம்பத்துகள் எல்லாம் வெளியே வந்து சமூகத்தினுடைய வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலியன அபிவிருத்தியடைய வகை செய்யவேண்டும். இல்லையெனில தங்கம், வெள்ளி, நிலத்திலேயே புதைந்து கிடத்தலே மேலாகும். கடவுள் அளித்திருப்பவைகளையெல்லாம் எல்லோருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் இந்த உண்மையை நீங்கள் அறிந்துகொண்டால் தானே முன்வந்து தானம் வழங்குவதுடன், மற்றவரையும் தூண்டுவீர்கள்.

### உழைப்புக்கு மதிப்பளியுங்கள்

ஒரு காலத்தில் பெரிய அரண்மனைகளில் அநேக ராணிகளை வைத்திருப்பவர்களையே பெரிய மனிதர்களாக மதித்து வந்தார்கள். இன்றோ நிலைமை மாறிவிட்டது. இரண்டு மனைவிகளையுடையவன் வெட்கப்படுகிறான். அவனுக்கு சமூகத்தில் மதிப்பு இல்லை. ஆனால் இன்று யாரிடம் அதிக செல்வம் சேர்ந்திருக்கிறதோ அவரே அதிக மதிப்பிற்குரியவராகிறார். கிராம ஜனங்கள் சாதுக்களையும், யோகிகளையும் மதித்து வணங்குகிறார்கள் ஆனால் அவர்களும் பிழைப்பின் காரணமாக தனவந்தர்களையே புகழவேண்டி இருக்கிறது. உண்மையில் கிராமவாசிகள்தான் செல்வந்தர்கள், அவர்களிடம் உழைப்பு இருக்கிறது. வாழ்க்கைக்குத் தேவையான நெய், பால், பழம், தானியம் எல்லாம் அவர்களிடம் இருக்கின்றன. ஆனால் அவர்கள் தங்களைத் தாங்களே உள்ளபடி உணராமலிருப்பதால் ஏழைகளாகவே இருந்து வருகிறார்கள். உழைப்புக்கு கௌரவம் அளிப்பதில்லை. பணத்திற்காகத் தங்களுடைய குழந்தைகளுக்குக்கூட கொடுக்காமல் எல்லாவற்றையும் விற்று விடுகிறீர்கள். ஏனென்றால் கிராமத்தில் கைத்தொழில் எதுவும் கிடையாது. துணிகளை வெளியிலிருந்து வரவழைக்கிறீர்கள். நெல், மாவு முதலியவைகளை இயந்திரங்களின் மூலம் அறைக்கிறீர்கள். இத்தொழில்கள் எல்லாம் கிராமத்திலேயே நடந்தால் நீங்கள் பெரிய அரசர்களாகிவிடுவீர்கள். உங்களிடம் உழைப்பு என்ற சக்தி இருக்கிறது. அதற்கு மதிப்புக் கொடுத்து நீங்கள் வேலை செய்தால் நீங்கள் கோரும் நிலங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

### பலத்தை அதிகரிப்பதற்கான வழி

இப்பொழுது உங்களுக்கு ஓட்டு சுதந்திரம் இருப்பதால் நீங்கள் ஆட்சி புரியலாம், வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களும், உழைப்பும் உங்களிடம் இருக்கின்றன. நீங்கள் பரஸ்பரம் அன்புடன் ஒத்துழைத்தீர்களானால் ஒரு புதிய சமுதாயத்தையே அமைத்துவிடலாம். பெரிய நிலச்சுவான்தார்கள் ஆறில் ஒரு பங்கை தானம் செய்துவிட்டால், அந்த நிலங்களில் உழைப்பாளர்கள் உற்சாகத்துடன் வேலை செய்வார்கள். அப்படிக்கில்லையென்றால் பெரிய தனவந்தர்களுடைய நிலங்களில் வேலை செய்வதற்குப் போதிய ஆட்கள் முன்வரமாட்டார்கள் என நான் நினைக்கிறேன். ஏழை பணக்காரர்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்க நாம் விரும்புகிறோம். எல்லோருக்கும் நிலமிருந்தால் அவர்கள் தானமளித்தவர்களை வாழ்த்துவார்கள். இன்று ஒரு ஆங்கில மாது "நீங்கள் பணக்காரர்களுக்கு சொல்லுவதுபோல் ஏழைகளுக்கு சொல்லுவது உண்டா என்று கேட்டாள்." பணக்காரர்களுக்கானல் நகரங்களில் அல்லவா நான் சுற்றிக்கொண்டிருப்பேன், கிராமங்களில் ஏழைகளே அதிகம் இருப்பதால் நான் அவர்களிடையே கிராமம் கிராமமாக சுற்றிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். இந்த கிராம

வாசிகளை விழிப்படையச்செய்வது எனது முயற்சி. அதற்காக பலாத்காரச்செயலில் ஈடுபடும்படி நான் சொல்லமாட்டேன். பலாத்காரச் செயல் புரிவது வெறுக்கத் தக்கது. எனவே கொஞ்சம் நில முடையவர்கள் கொடுத்தால் அதன் காரணமாக பெரிய நிலச்சுவான்தார்களும் கொடுப்பார்கள். ஏழைகள் விழிப்படைந்தால் அதன் பிரபாவம் பணக்காரர்களிடையேயும் ஏற்படும். ஏழைகளுக்கு நிலத்தில் வேலை செய்ய உரிமை இருப்பதுபோல் பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலத்தை சந்தோஷமாக தானம் செய்தும், அதில் நிலமற்ற வர்களை குடியேற்றியும். அவர்களுக்குத் தேவை யான, விதை, கலப்பை, எருது, முதலியனவும் கொடுத்து ஆதரிக்க வேண்டும். இந்த உதவிக்கு பிரதிபலனுக நிலச்சுவான்தார்களுக்கு, உயிரைக் கூட கொடுக்கக்கூடிய நண்பர்கள் கிடைப்பார்கள்.

**பூமிதானத்தால் உலக க்ஷேமம்.**

சிலர் தாங்கள் பூமிதானம் செய்து மற்றவர் களைக் கேட்க வெட்கப்படுகிருர்கள். நீங்கள் மட் டும் ஒரு நல்ல பழத்தை சாப்பிட்டுவிட்டு மற்ற வர்கள் அதன் ருசியை சுவைக்காமல் இருக்க விடுவீர்களா? எனவே நீங்களும் மற்றவருக்கும் எடுத்துச் சொல்லவேண்டும். அப்பொழுதுதான் நமது வேலை விருத்தியடையும். இதற்கான சூழ் நிலை நமது தேசத்தில் ஏற்பட்டுவருகிறது. இதர நாடுகளிலும் பூமிதானத்தின் மூலம் சாந்தியும், நியாயமும், தர்மமும் நிலைநிறுத்தப்படும் என்ற நம்பிக்கை வளர்ந்து நம்முடைய வேலையை ஆவ லாக கவனித்து வருகிருர்கள். மேல் நாட்ட வர்கள் அநேகர் சீதோஷ்ண நிலையையும் பொருட் படுத்தாது என்னுடன் கால்நடையாக நடந்து வரு கிருர்கள். இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் உலகத் திற்கே இதனுல் விடுதலை கிடைக்கும் என அவர்கள் நம்புகிருர்கள். இவ்விதம், அமைதியா கவும், அன்புடனும் நிலப் பிரச்னை தீர்ந்தால் இந்தியாவினுல் உலகமே காப்பாற்றப்படும் என் பது உறுதி. — விநோபா

## தொழில் வசதியும் வேலை உரிமையும்

தேசத்தில் இப்பொழுதுள்ள பொருளாதார அமைப்பில் மூன்று வகையான தொழில் முறைகள் அமுலில் இருக்கின்றன.

1) ரேடியோ, ஆகாய-விமானம், சினிமா, போட்டோ சாமான்கள் முதலியன இதற்கு முன்பு இல்லாமலிருந்த தொழில்கள்.

2) முன்பு ஒரு சிலரால் செய்யப்பட்டு தற் சமயம் பரவல் முறையில் விரிவாகி இருக்கும் தொழில்கள். தபால், மோட்டார் போக்குவரத்து கண்ணுடிச் சாமான்கள், கல்வி, வைத்தியம், ஆகிய வைகளுக்கான சாதனங்கள் தயாரித்தல்.

3) தேசம் முழுவதிலும் முன்காலத்தில் குடிசைத்தொழில் மூலம் மக்களுக்கு அத்தியா வசியமான பொருள்கள் வேண்டிய அளவு நல்ல முறையில் தயாரிக்கப்பட்டுவந்தது, மூன்ருவ தாகும். இவைகள் தற்சமயம் குவியல் முறையில் தயாரிக்கப்பட்டு அதிகாரம் ஒரு சிலருடைய கை யில் போய்ச் சேர்ந்துவிடும்படியான ஆலைத் தொழில் முறை. இவ்வகையில் துணி மில்கள், சர்க்கரை மில்கள், செருப்புத் தொழிற்சாலை முதலியவைகள் சேருகின்றன. இவைகளால் உபயோகிப்பவர்களுக்கு விசேஷ அனுகூலமில்லா மல் இத்தொழில்களில் ஈடுபட்ட பல லட்சக்கணக் கான தொழிலாளர்கள் வேலையற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

கிராமத் தொழில்களை நசுக்கி மக்களை வேலை யற்றவர்களாகச் செய்யும் அவைகளைப் பெரிய ஆலைத்தொழிலில் சேர்க்கும்படியான குவியல் முறையைப்பற்றிய நமது கருத்துக்களை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். பணம் சேர்க்க விரும்புகிறவர்கள் அப்படிச் செய்யட்டும். ஆனுல் அவர்களுடைய செயலின் காரணமாக ஆயிரக் கணக்கானவர்கள் வேலையை இழந்து வாழ்வுக்குத் தவிக்கும்படியான நிலைமையை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஆலைகளில் துணி தயாரித்து கைத்தறிக்காரர்களை பட்டினி போடுவதையும், பெரிய செருப்புத் தொழிற்சாலைகளினுல் கிராமத் திய தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்வதை யும், பெரிய மில்களில் ரெடிமேட் ஆடைகள் தைத்து ஆயிரக்கணக்கான தையற்காரர்களின் வேலையை பாதிப்பதையும் சாதாரண விஷயமாக மதிக்கக்கூடாது. இதை ஒரு பெரிய குற்ற மாகவே கருதவேண்டும். மனிதனுக்கு வாழ் வதற்கு எவ்வளவு உரிமையுண்டோ, அவ்விதமே மானமாக வேலை செய்து பிழைக்கவும் உரிமை உண்டு. இக்கருத்தை அடிப்படையாகக்கொண்ட சட்டங்களே நாட்டில் இருக்கவேண்டும்.

அதிகமானவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதே நமது பொருளாதார நோக்க மாக இருக்கவேண்டும். அதிகமானவர்கள் வேலை செய்தால் உற்பத்தி தானே பெருகும். சரக்கு களுக்கும் தானே கிராக்கி ஏற்படும். நவீன வர்த் தகத் துறையில் போட்டியிட்டு ஒருவர் மற்றவரை வீழ்த்துவது சரியாகத் தோன்றலாம். ஆனுல் இந்தப் போட்டி மனப்பான்மை இனியும் நீடிக்க அனுமதிக்கக்கூடாது. நேரிடையாக ஒரு வரை கொலைசெய்வது எவ்வளவு கொடூரமோ, அதே போலத்தான் பொருளாதாரத் துறையிலும் ஒருவனை வீழ்த்துவதையும் கருதவேண்டும்.

தனி நபர்களின் வாழ்க்கை வசதிகளைப் பாதிக் கும் எந்த ஏற்பாட்டையும், அவனுடைய உயிருக்கு விளைவிக்கும் அபாயமாகவே கருதவேண்டும். தொழிலாளர்கள் வேலையிழக்கவில்லை, அவர்க ளுக்கு மாற்று வேலை கிடைத்து விட்டது என்ற உண்மை தெரியாதவரையில் எவரும் புதியதாக வோ, அல்லது பழைய ஆலைத்தொழிலையோ நடத்த அனுமதிக்கலாகாது. பொருளாதார முன் னேற்றம் அரசியலின் ஸ்திரத்தன்மையைப் பொறுத்திருக்கிறது. வருவாயுள்ள ஸ்திரமான வேலை வசதிகள்தான் பொருளாதார முன்னேற் றத்திற்கு அடிப்படை. எனவே அதிகமான உற் பத்திக்கு முன்பு, அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்ட தேசத்தின் ஜனங்களுடைய நல்வாழ்க்கைக்கு பாதகமான முறையில் அதன் பொருளாதார அமைப்பிலும், தொழிலிலும், பெருவாரியான மக் கள் ஈடுபடுகிருர்கள். யுத்ததளவாடம், ராணுவ சேவை, போலீஸ், சிறை நிர்வாகம், ஆகிய இலாக் காக்களில், ஆலைத்தொழில்களினுல் பாதிக்கப்பட் டவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிருர்கள். ஆனுல் நாம் அஹிம்சா முறையிலேயே வாழ விரும்புவ தால், மக்களுக்கும், சமூகத்திற்கும், பயன் தரத் தக்க வகையில் அதிகப்படியான அளவு உற்பத்தி வேலைகளிலேயே ஈடுபட வேண்டும்.

அதிக உற்பத்தியைக் காட்டிலும் அதிகமான பேர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை ஏற் றுக்கொண்டால் நமது வேலை சுளுவாகும். வாழ்க் கைக்கு அத்தியாவசியமான பொருள் தயாரிப்பில் எல்லோருக்கும் வருஷம் முழுவதும் ஊதியம் தரும்படியான வேலைத்திட்டத்திற்கு முதலிடம்

கொடுக்கவேண்டும். வேலையற்றவர்களே இருக்க மாட்டார்களாதலால் சமூகத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை தயாரிக்கும் வேலையில், குடியானவர்களும், கிராமத்தொழிலாளியும் அமர்த்தப்பட்டுவிட்டால், அதிக உற்பத்தியைக் காட்டிலும் அதிக பேர்களுக்கு வேலையளிக்கும் திட்டம் சுமுகமாக நிறைவேறும். தொழிற்சாலையின் இயந்திரத்தின் ஒருபகுதியாக வேலை செய்பவன் ஆதர்ச தொழிலாளியாகமாட்டான். தன் முயற்சியினால், உள்ள வசதிகளைப் பயன்படுத்தி, தன்னையும், தன் குடும்பத்தினரையும், பிறரையும் கொண்டு, மக்களுக்கு அவசியமும் தேவையுமான பொருள்கள் உற்பத்தி செய்பவனே ஆதர்ச தொழிலாளியாவான். ஒரு குடும்பத்தை சீராக நடத்துவதே எளிய கூட்டுறவு முறைக்கு சமானமாகும். இதற்குத் தேவையான வசதிகளும், உதவியும், அளிப்பதே இயற்கையான முறையில் சுயமே வேலை செய்வதற்கு அளிக்கப்படும் சாதனமாகும்.

இவ்விதம் சுயமே வேலை செய்வதற்கான வசதிகளை சர்க்காரோ, இதரர்களோ குறைக்க அனுமதிக்கக்கூடாது. தனக்கு இஷ்டப்பட்ட தொழிலை பழகுவதற்கான வசதிகள் ஒவ்வொரு நபருக்கும் கிடைக்கவேண்டிய உரிமையாகும். மக்களுக்கு சுயமே வேலைசெய்ய வசதியளிக்கும் பொருட்டு வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவு, உடைக்கான தொழில்களை தனியாக ஒதுக்கிவிட வேண்டும்.

அதிகப்படியான வேலை, சமத்துவம், நீடித்த தன்மை, மதிப்பு, சந்தோஷம் எல்லாம் தன் முயற்சியால் அடைவதற்குத்தான் குடிசைத் தொழில்களும், சிறு கைத்தொழில்களும் முயற்சித்து வருகின்றன. இவைகளுக்கு ஆதரவும், பாதுகாப்பும் அளிக்க வேண்டியது சர்க்காருடையவும், பொது மக்களுடையவும் கடமையாகும்.

**மாரிஸ் பிரெட்மன்.**

---

*(முதல்பக்கத் தொடர்ச்சி)*

கண்காட்சியில் நைனுக்கவுண்டன்வலசு பரிசிரமாலய மாணவ மாணவிகளால், நூற்ற நூலை கதிரிலிருந்தே நேராகப் பாவு ஓடுவதும், ஊடைக்கு ஈரிழை போட்டு நெசவு செய்வதற்கு நூற்ற நூலை தார் சுற்றுமல் இரண்டு கண்டுகளை அப்படியே நாடாவின் இரு பக்கங்களிலும் வைத்து நெசவு செய்து காண்பிக்கப்பட்டது. இம்முறையில் நெசவு செய்வதின் மூலம் நூற்ற நூலை சிட்டம் போடுவதற்கும், பின்னர் அதைக் கறப்பதற்கும், கறந்த நூலை தார் சுற்றுவதற்கும் செலவாகும் நேரத்தை மீதப்படுத்த முடியும். இதனால் கதரின் அடக்க விலையும் சிறிது குறைவாக ஏதுவாகும். இவ்விஷயத்தை கண்காட்சிக்கு விஜயம் செய்த சென்னை மாகாண முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்களுக்கும், தாராபுரம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ கே. எஸ். நடராஜ கவுண்டர் அவர்களுக்கும் விளக்கி கூறப்பட்டது.

முதன் மந்திரி அவர்களும், தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்களும் கண்காட்சியில் நடைபெற்ற வேலையையும் பார்த்தார்கள். மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தவர்கள், திரளாக வந்து கலைக் கண்காட்சியைப் பார்த்தார்கள். பத்திரிகை நிருபர்களும் வந்திருந்தார்கள். அவர்களுக்கு அம்பர் ராட்டை அதன் நூற்பு வேகம் முதலியவற்றையும், மூங்கில் ராட்டை செய்வதைப் பற்றியும் விளக்கிக் கூறப்பட்டது. ஒரு பக்கத்தில் பருத்தியிலிருந்து ஆரம்பித்து மறுபக்கத்தில் துணி தயாராகி வந்ததைப் பார்த்தபோது ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு கிராமத்திலும் இம்மாதிரி நூற்கவும், நெசவு செய்யவும் ஆரம்பித்தால் நம் நாட்டிலுள்ள துணிப் பி[illegible]னையைத் தீர்க்க முடியும்; துணிக்காக பெரிய [illegible]ல்களையும், நகரங்களையும் எதிர்பார்க்க வே[illegible]யமில்லை என்ற எண்ணம் பலருக்கு உண்டானது.

— **வி. துரைராஜன்**

## தாராபுரம் வட்டகை கிராமோதய கதர் சங்கங்கள்

சென்ற வாரத்தில் தாராபுரம் வட்டகையைச் சேர்ந்த சில கிராமோதய கதர் சங்கங்கள் பார்வையிடப்பட்டன. அவைகள் சர்வோதயத் திட்டப் பிரகாரம் முன்னேற முயற்சித்து வருகின்றன. தற்சமயம் செய்துவரும் நூல் கொள்முதல், கதர் வினியோகம் இவைகளையல்லாமல் இதர கிராமத் தொழில்களையும் செய்ய முயன்று வருகின்றன. நொச்சிப்பாளையம் கிராமத்தில் ஒரு ஆரம்ப பள்ளிக்கூடம் சங்கத்தின் சார்பில் நடைபெற்று வருகிறது. இப்பள்ளியின் கட்டணத்திற்காகவும், புஸ்தகங்களுக்காகவும் நூல் சிட்டமாகவே பெற்றோர்கள் கொடுக்கிறார்கள். பள்ளியின் இதர செலவுகளுக்காக நூற்றலையும், நெய்தலையும் கற்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த முயற்சி இதர சங்கங்களுக்கும் ஒரு உதாரணமாக விளங்கும் எனக் கருதுகிறோம்.

மேலும் நூலுக்குப் பதிலாக இந்த கிராமத்தில் நூற்பவர்களுக்கு சுத்தமான நாட்டுச் செக்கு எண்ணை விற்பனை செய்யப்படுகிறது. நாலைந்து சங்கங்களுக் கிடையில் ஒரு சீர்திருத்தப்பட்ட செக்கு நிறுவப்பட்டு, அதன் மூலம் கிராமவாசிகள் தங்களுடைய எண்ணை வித்துக்களை ஆட்டிக்கொள்ள வசதி செய்ய சங்கத்தின் சார்பில் யோசிக்கப்பட்டு வருகிறது.

இச்சிப்பட்டி, கொத்தனூர் ஆகிய இரு சங்கங்களில் தற்சமயம் இரண்டு தறிகள் நெய்து வருகின்றன. ஆனால் இது போதாது, சங்கத்தினுடைய எல்லா நூல்களையும் நெய்ய இன்னும் அநேக தறிகள் வேண்டும். சங்கம் உள்ள சில ஊர்களில் தறிகளும் இருக்கின்றன. ஆனால் அவைகள் தற்சமயம் கதர் நெய்வதில்லை. சங்க அங்கத்தினர்கள் அத்தறிகாரர்களை அணுகி கதர் நெய்வதின் அவசியத்தை விளக்கி அவர்களை கதருக்கு மாற்றவேண்டும். இப்பணியை சங்க அங்கத்தினர்கள் ஏற்றுக்கொண்டு கூடிய வரையில் எல்லோரையும் மாற்றிவிடுவதாக உறுதி அளித்திருக்கிறார்கள்.

தறிகள் இல்லாத அநேக சங்கங்களில் நெசவு பழக ஆர்வமுள்ள உள்ளூர் இளைஞர்கள் முன்வருகிறார்கள். நெசவு கற்றுக்கொண்டு சங்கத்தின் நூல்களை நெய்வதே அவர்கள் நோக்கம். அவர்களுக்கும் நெசவு கற்பிப்பதற்கான பயிற்சி சாலைகள் சாத்தியமான அளவு ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

---

*(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)*

## இந்த இதழில்

நாட்டுச் செக்கு பிழைக்குமா? 69
கதர்க் கலைக் கண்காட்சி 69
காலத்தின் போக்கை உணருங்கள் 70
தொழில் வசதியும் வேலை உரிமையும் 71
தாராபுரம் வட்டகை கிராமோதய கதர் சங்கங்கள் 72

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

**Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.**